# நம்மாழ்வார் பாசுரங்களில் தூது

முனைவர்.**ச.ஆதிசக்தி**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

தொல்காப்பியர் காலத்திலிருந்து இன்றைய காலக்கட்டம் வரை தமிழிலக்கிய வரலாற்றில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றி தமிழன்னையை அழகு செய்கின்றன. அதில் தமிழ் வளர்ச்சிக்கு சமயங்களும், சமயங்களின் தொடர்பான இலக்கியங்களும் இன்றியமையாதனவாக திகழ்கின்றன. அதில் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தங்களில் இடம் பெற்ற தூதுகளில் நம்மாழ்வார் பாசுரங்கள் உணர்த்தும் தூது பற்றிய ஆய்வே இக்கட்டுரையில் மேற்கொள்ளப்படுகிறது.

**நம்மாழ்வார் பாடலில் தூது:**

நம்மாழ்வார் தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் பாவித்து பல்வேறு வகையான பொருட்களை தூதாக அனுப்புகிறார். இவை நம் உள்ளத்தை உருக்கி தமிழின் சிறப்பினை எடுத்துரைக்கின்றன.

***"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்***

***விருந்தமிழ் தம் என்றாலும் வேண்டேன்"***

என்று பிற்காலத்தில் தோன்றிய 'தமிழ் விடு தூது' என்ற இலக்கியம் தமிழுக்குச் சிறப்பு செய்தது போல 'நம்மாழ்வாரின் தூதும் ' சிறப்பிடம் பெறுகின்றது.

**நெஞ்சு விடு தூது:**

நம்மாழ்வார் தமது திருவிருத்தத்தில் தனது நெஞ்சையே இறைவனிடம் தூதாக அனுப்புகிறார்.

***"மடநெஞ்சம் என்றும் தனது நெஞ்சம் என்றும் ஓர் கருமம் கருதி***

***விட நெஞ்சை உற்றார் விடவோ அமையும் அப்பொன் பெயரோ***

***தட நெஞ்சை சீண்ட பிரணார் தமது அடிக்கீழ் விடப்போய்***

***திட நெஞ்சை ஆய், எம்மை நீத்து, இன்றுதாறும் திரிகின்றதே"***

அதாவது மனம் பேதமையுடையது என்றும், அந்தரங்கம் ஆனதென்றும் நம்பி ஒரு காரியத்திற்காகத் தூது விடக் கற்றவர் அத்துணிவை விட்டு விட வேண்டியது தான். ஏனென்றால் இராவணன் மார்பைப் பிளந்த பெருமான் திருவடிகளில் நான் என் நெஞ்சைத் தூது விட்டதும், அது போய் திடமாகி எம்மைக் கைவிட்டுத் திரும்பாமல் இன்று வரையில் அவரையே தொடர்ந்து திரிக்கின்றது என்று நெஞ்சத்தை தூது விட்ட தலைவி இரங்குகிறாள்.

**வண்டு விடுத்தூது:**

***"வீசும் சிறகால் பறந்தீர்! விண்நாடு நுங்கட்டு எளிது***

***பேசும்படி அன்ன பேசியும் போவது நெஞுதொடு உண்டு***

***ஏசும்படி அன்ன செய்யும் எம் ஈசர் விண்ணோர் பிரானார்***

***மாசு இலர் மலர் அடிகீழ் எம்மை சேர்விக்கும் வண்டுகளே"***

பலரும்(கவரும்) ஏசும்படி நெய்யைக் கவர்ந்து உண்ட எம்தலைவர் விண்ணோர் பிரானின் திருவடிக்கீழ் எம்மை சேர்க்க வல்ல வண்டுகளே! உம் வீசும் சிறகால் பறந்து செல்வீர் பரமபதமும் உனக்கு எளிது. நீங்கள் தூதுக்குப் புறப்படும் முன் இறைவனிடம் பேச போவதை ஒருமுறை என்னிடம் பேசி காட்டுங்கள் என்ற கூறி வண்டுகளைத் தூதாக அனுப்புகிறார்.

**அன்னம் குருகு விடுத் தூது:**

***"அன்னம் செல்வீரும் வண்டாம் செல்வீருமு தொழுது இரைந்தேன்***

***முன்னம் செல்வீர் மறவேல்மினோ? கண்ணன் வைகுந்தனோடு***

***என் நெஞ்சினரைக் கண்டால் என்னைச் சொல்லி அவரிடை நீர்***

***இன்னம் சொல்வீரோ? இதுவோ தகவு? என்ற இசையின்களே"***

வானில் செல்லும் அன்னங்களையும் குருகுகளையும் நான் வணங்கி கேட்கிறேன். உங்களுக்குள் முன்னே செல்பவர் மறவாதீர்கள். பரமபதநாதனும் கண்ணனுமான பெருமானுடன் என்

மனம் இருப்பதை நீங்கள் பார்த்தால் என்னைக் குறிப்பிட்டு அதை மீண்டும் வராமல் அங்கேயே தங்கியது தகுதியா? என்று கேளுங்கள் என்று அன்னம் குருகுகளைத் தூதாக விடுகிறார்.

**திருவாய் மொழியில் தூது:**

*"நீ அலையே? சிறு பூவாய்! நெடுமாலர்க்கு என் தூதாய்*

*நோய் எனது நுவல் என்ன நுவலாதே இருந்த தொழிந்தாய்*

*சாயலொடு மணி மாமை தளர்ந்தேன் நான் இனி உனது*

*வாய் அலகில் இன் அடிசால் வைப்பாரை நாடாயே.*

*சிறிய நாகணவாய் பறவையே"*

நெடுமானிடம் எனக்காகத் தூது செல் என வேண்டியும் நீ செல்லாமல் என்னை செயலிழக்கச் செய்தாயே! சாயலும் நிறமும் நீங்கிய நான் இனிமேல் உயிர் வாழ மாட்டேன். உன் வாயலகில் உணவை ஊட்ட வல்லவர்களைத் தேடிக்கொள் என்று தன் பிரிவாற்றாமையால் புலம்புகிறாள்.

**மேகம் விடு தூது:**

*"தெளி விசும்பு கடிது ஓடித்தீ வளைத்து மின் இலகும்*

*ஒளி முகில்கான்! திருமூழிக் களத்து உறையும் ஒண் சுடர்க்கு*

*தெளி விசும்பு திருநாடாத் தீவினையேன் மனத்து உறையும்*

*தூரிவார்கள் குழலார்க்கு என் தூது உரைத்தல் செப்புமினே!*

தீ வளைவது போல, மின்னலை வானில் ஓடச் செய்யும் ஒளியுள்ள மேகங்களே! திருமூழிக்களப் பெருமான் பரமபதம் போல தீவினையேன் மனதிலும் எழுந்தருளியுள்ளான் தேனொழுகும் மலர் சூடிய குழல் பெற்ற அவன் ஒளிப்பிழம்பானவன் நீங்கள் எனக்காக அவனிடம் தூது சென்று செய்தியைக் கூறுங்கள் என மேகத்தை தூதாக அனுப்புகிறாள்.

**நாரை விடுத் தூது.**

அழகிய சிறகுடைய அன்பு நாரையே! உன் சேவலுடன் எனக்காக இரங்க மாட்டாயா? எனக்கு நீ அருள் செய்து கருடக் கொடியாளனிடம் என் தூதாய்ச் செல்வாயாக! ஒரு வேளை கொடிய சிறையில் வைத்தாலும் எனக்காக அவ் விருப்புக்கு இசைவீர்களா? ஒரு குற்றமும் ஆகிவிடாது என்கிறாள்.

*"அம்சிறைய மட நாராய்! அளியத்தாய்! நீயும் நின்*

*வன்சிறையில் அவன் வைக்கில் வைப்புண்டால் என் செயுமோ?*

**குயில் விடு தூது:**

கூட்டாக வாழும் குயில்களே! செந்தாமரைக் கண்ணனிடம் எனக்காகத் தூது செல்வீர்களா? நான் கூறும் சொற்களை அவனிடம் கூறினால் என்ன குற்றம்? அவன் திருவடியில் இரந்து குற்றேவல் செய்ய முடியாதபடி முற்பிறவி வினைகள் தடுத்துவிட்டன அதற்காக நான் அகன்று போவது முறையாகுமோ என்கிறாள்.

*"முன்செய்த முழுவினையால் திருவடிக்கீழ்க் குற்றேவல்*

*முன்செய்ய முயலாதேன் அகல்வதுவோ? விதியினமே"*

**அன்னம் விடுத் தூது:**

அன்னங்களே! நீங்கள் செய்த பேற்றினாலே பேடையோடு கலந்து மகிழும் அழகான நடை உடையீர்! எனக்காகக் கள்வனாகிய எம்பெருமானிடம் தூது செல்லுங்கள். அறிவினால் குறளுருவாகி உலகத்தை யாசித்தவனிடம் ஒரு பெண் தன் வல்வினைகள் வழியாதோ என்று உள்ளம் கலங்கி மயங்குகிறாள்' என்று கூறுங்கள்

*"விதியினால் பெடை மணக்கும் மென் - நடைய அன்னங்காள்*

*மதியினால் குறள் மாணாய் உலகு இரந்த கள்வர்க்கு*

*மதியிலேன் வல் - வினையே மாளாதோ? என்று ஒருத்தி*

*மதி எல்லாம் உள் கலங்கி மயங்கமால் என்னீரே"*

**அகன்றில் விடுத் தூது:**

நல்ல நீலநிற மகன்றில்களே! என் இரங்கத் தக்க தன்மையைப் பார்த்தும் பிரிந்து இருத்தல் தகாது என்றவன் நினைக்க வில்லையே! நீலமுகில் அன்பனுக்கு இனி என்ன சொல்லப்போகிறேன்? உடனே வந்து கூடானாகில் இனிஅவள் உயிர் தாங்காது என்று ஒரு செய்தியைச் சொல்லுவீர்களா? மாட்டீர்களா? என்று புலம்பி மொழிகிறாள்.

*"என் நீர்மை கண்டு இரங்கி இது தகாது என்னாத*

*என் நீல முகில் வண்ணறகு என் சொல்லி யான் சொல்லுகேனொ?*

*நன் நீர்மை இனி அவர்கண் தங்காது என்று ஒரு வாய்ச் சொல்*

*நன் - நீல மகன்றில்காள்! நல்குதிரோ? நல்கீரோ?*

**கிளையை விடுத் தூது:**

இளங்கிளியே! என் குற்றங்களையே எண்ணி அருள் செய்யாமல் திருமகள் கேள்வன் புறக்கணிக்கிறான். அம்பைத் துளைத்துப் பனி வாடை உடம்பை அறுக்கிறது. அவரிடம் தலைவராக உருபொறுக்கும் தன்மைக்கு எதிராக அவள் என்ன தவறு செய்துவிட்டாள்? என்ற ஒருமொழி கூறுங்கள்.

*"என்பு இழை கோப்பது போலப் பனி வாடை ஈர்க்கின்றது:*

*என் பிழையே நினைத்தருளி அருளாத திருமாலார்க்கு*

*என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்க என்று ஒரு வாய்ச்சொல்*

*என் பிழைக்கும்? இளங்கிளியே யான் வளர்த் நீ அலையே?*

**நாகணவாய் விடுத்தூது:**

சிறிய நாகணவாய்ப் பறவையே! அவரிடம் எனக்காகத் தூது சென்று என் பிரிவு நோய்த் துன்பத்தைத் தெரிவீ என்று கூறியும் நீ சென்று தெரிவிக்கவில்லையே! ஆகையால் நான் செயல் இழந்தேன். சாயலும் அழகிய நிறமும் நீங்கப் பெற்றென் இனிமேல் உனது வாயலகில் உணவை ஊட்ட வல்லவர்களைத் தேடிக்கொள் என்று கூறுகிறாள்.

*" நீ அலையே? சிறு பூவாய்! நெடுமாலார்க்கு என் தூதாய்*

*நோய் எனது நுவல் என்ன நுவலாதே இருந்தொழிந்தாய்*

*சாயலொடு மணி மாமை தளர்நதேன் நான்: இனி உனது*

*வாய் அலகில் இன்-அடிசில் வைப்பாரை நாடாயே"*

**வாடைக் காற்று விடுத்தூது:**

வாடைக் காற்றே! எம்பெருமானிடம் எனக்காகப் பிரிவில் தனித்திருப்பது நல்வினை அற்றது' என்று கூறு உலகில் பலவகைப் பூக்களை நாள்தோறும் நாராயணனின் வாடாத மலர்களைத்திருவடியில் இட்டு வழிபடுவதற்கே உலகத்து உயிர்களைப் படைத்தான். நான் மட்டும் பிரிவதோ? அவன் தரவில்லையேல் மீண்டு வந்து என் உடலை அறுப்பாய் என்று துன்ப நிலை ததும்ப கூறுகிறாள்.

*"நாடாத மலர் நாடி நாள்தோறும் நாரணன்- தன்*

*வாடாத மலர் - அடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று*

*வீடாடி வீற்றிருத்தல் வினை அற்றது என் செய்வதோ*

*ஊடாடு பனி வாடாய் உரைத்து ஈராய் எனது உடலே"*

**வைகல் எனத்தெடங்கும் பாடல்கள்:**

வைகல் பூங் கழிவாய் எனத் தொடங்கும் பாடல்கள் அனைத்தும் பறவைகளைத் தூது விடுவதாகவே உள்ளது.

**குருகு விடுத் தூது:**

நாள்தோறும் அழகிய உப்பங்கழிகளிலே வந்து மேய்கின்ற குருகுக் கூட்டங்களே! வயல்களில் செற்நெற் பயிற்கள் ஓங்கி வளர்ந்திருக்கும் திருவண்டூரில் திருக்கரத்தில் சக்கரப்படை ஏந்திய எம்பெருமானிடம் நீங்கள் எனக்காக என் காதலைக் கைகள் கூப்பியவாறு வணக்கமுடன் சொல்லுங்கள் என்று தன்னுடைய ஏக்கத்தினை வெளிப்படுத்துகிறாள்.

*"வைகல் பூங் கழிவாய் வந்து மேயும் குருகினங்காள்*
*செய் கொள் செந்நெல் உயர் திருவண்வண்டூர் உறையும்*
*கை கொள் சக்கரத்து என் கனிவாய்ப் பெருமானைக் கண்டு*
*கைகள் கூப்பி, சொல்லீர் - வினையாட்டியேன் காதன்மையே"*

என்று நம்மாழ்வார் தம்முடைய பாசுரங்களில் தூது விடும் பொருண்மையை அ.்றிணைப் பொருள்களை கொண்டு தலைவி தூது விடுப்பதாக பாடல்கள் அமைந்துள்ளன. இவருடைய தூது பாடல் அனைத்தும் பழைய தூது மரபில் பிறழாது அமைந்துள்ளன.